## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## DVC.No. 4 / 2020

### PW-2

2025-ம் ஆண்டு ஜீன் மாதம் 05-ம் நாள் வியாழன் கிழமை மனுதாரர் தரப்பு 2-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 05.06.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பிரசாத் | **தொழில்** | : | Electrician |
| **த/பெ.** | : | வல்லவன் | **வசிப்பிடம்** | : | மருவாய் கிராமம் |
| **வயது** | : | 34 | **வட்டம்** | : | குறிஞ்சிப்பாடி |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) நான் Electrician வேலையை கான்ட்ராக்ட் எடுத்து செய்து வருகிறேன். கார்த்திகேயன் ஓட்டோ ஷோ ரூமில் வேலை செய்கிறார். அவர் 3, 4 வருடமாக அங்கு வேலை செய்கிறார். மனுதாரர் Computer Operator ஆக வேலை செய்கிறார். பஞ்சாயத்து அலுவலகத்தில் அவ்வாறாக வேலை செய்கிறார். நான் எனது பள்ளி படிப்பை வடலூாரில் உள்ள புணித ஜான் உயர்நிலை பள்ளியில் பள்ளிப்படிப்பை படித்தேன். எனது நண்பர் கார்த்திகேயன் எந்த பள்ளியில் படித்தார் என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. மனுதாரர் எந்த பள்ளியில் படித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. எனது ஊருக்கும், கார்த்திகேயன் மற்றும் மனுதாரர் ஊருக்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். நான் இரு சக்கர வாகனம் வைத்துள்ளேன். Hero Honda Passion வாகனம் வைத்துள்ளேன். அதை 2014 ம் ஆண்டு வாங்கினேன். எனது நண்பரும், மனுதாரரும் எந்த வண்டி வைத்துள்ளார்கள் என்றால் மனுதாரர் Scooty வாகனம் வைத்துள்ளார். கார்த்திகேயன் பெரிய இரு சக்கர வாகனம் வைத்துள்ளார். எந்த மாடல் என்று எனக்கு தெரியவில்லை.

2) மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த மண்டபத்தில் திருமண வரவேற்பு வைத்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அவர்களது திருமணம் வேலுடையான்பட்டு கோவிலில் நடந்தது. அந்த திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன்.

இரண்டாம் எதிர்மனுதாரரின் பெயர் எனக்கு தெரியவில்லை. அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். அவர் மனுதாரரின் மாமனார் ஆவார். அவரை நான் இடையில் எப்போதாவது பார்த்தது உண்டா என்றால் திருமணத்தின்போது பார்த்துள்ளேன். அதன்பிறகு ஓரிரு முறை பார்த்துள்ளேன். எங்கு பார்த்தேன் என்று ஞாபகமில்லை. 2ம் எதிர்மனுதாரர் ஊரிலேயே இல்லை என்றாலும் அவரை நான் பார்த்திருக்க வாய்ப்பே இல்லை என்றாலும் சரியல்ல, திருமண சமயத்தில் பார்த்துள்ளேன்.

3) காத்திகேயனின் அலைபேசி எண் எனக்கு தெரியுமா என்றால் மனப்பாடமாக தெரியாது, ஆனால் அவருடைய எண் என்னிடம் உள்ளது. அது எந்த வகை நிறுவனத்தை சார்ந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மனுதாரரின் அலைபேசி எண் எனக்கு தெரியுமா என்றால் அவரது எண் என்னிடம் உள்ளது, அது எந்த வகை நிறுவனத்தை சேர்ந்தது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எந்த நாள் மற்றும் எந்த தேதியில் நடந்தது என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் தேதியை குறிப்பிட்டு நான் கூறவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது எந்த காவல் நிலையம் என்று எனக்கு தெரியுமா என்றால் மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார்கள்.

4) கார்த்திகேயனின் பெற்றோர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அப்பாவின் பெயர் கிருஷ்ணமூர்த்தி, அம்மாவின் பெயர் தனலட்சுமி ஆகும். கிருஷ்ணமூர்த்தி என்.எல்.சியில் வேலை செய்கிறார். அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் சோலார் சம்மந்தமான பணியில் ஒப்பந்த அடிப்படையில் முதலில் பணியாற்றினார். தற்போது என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. தற்போது அவர் வேலையில் இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டார், பணி ஓய்வு பெற்றுவிட்டு 4, 5 ஆண்டுகள் ஆகின்றது. சிலம்பரசன், செல்வகுமார், திருவேங்கடம் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் காவல் நிலையம் வந்தபோது தெரியும். சிலம்பரசன், செல்வகுமார், திருவேங்கடம் ஆகியோர் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. காவல் நிலையம் வந்தபோதுதான் தெரியும். அவர்கள் மனுதாரரின் அப்பாவுடன் வேலை செய்யும் நபர்கள் ஆவார்கள்.

5) குடும்பம் சம்மந்தமாக மேற்படி நபர்கள் பஞ்சாயத்து பேசினார்களா என்றால் ஆமாம். மேற்படி பஞ்சாயத்தில் என்ன முடிவானது என்றால் மனுதாரரை எதிர்மனுதாரர்கள் வீட்டில் அழைத்துக்கொண்டு வந்து விடச்சொன்னார்கள். அதற்கு மனுதாரர் அங்கு சென்றால் தனக்கு பாதுகாப்பு இல்லை என்றும், தன் கணவர் வீட்டில் இல்லை என்றும்,

அவர் வெளிநாட்டில் உள்ளார் என்றும் மாமியார், மாமனார், நாத்தனார் ஆகியோரால் தனக்கு பிரச்சனை என்றும் கூறினார். எதிர்மனுதாரர்கள் வீட்டில் யார், யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மனுதாரரின் குழந்தையின் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அவர் எந்த பள்ளியில் படிக்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் பள்ளியில் படிக்கிறார் என்று மட்டும் தெரியும், எந்த பள்ளி மற்றும் எந்த வகுப்பில் படிக்கிறார் என்று எனக்கு ஞாபகமில்லை. 1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் எந்த நாட்டில் இருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் முதலில் துபாயில் இருந்தார், பின்னர் எங்கிருந்தார் என்று எனக்கு தெரியவில்லை.

6) ராஜேந்திரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் அவர் மனுதாரரின் நாத்தனாரின் கணவர் ஆவார். அவரை பற்றிய தகவல்கள் எனக்கு தெரியுமா என்றால் அவரை தெரியும், அவரை பற்றிய தகவல்கள் எனக்கு அதிகமாக தெரியாது. மனுதாரரின் நாத்தனாரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அவர் பெயர் சுகந்தி ஆகும். அவர் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் பார்த்தபோதெல்லாம் அவர் வீட்டில்தான் இருந்தார். நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது எ ன்றாலும், மனுதாரர் சொல்லிக்கொடுத்துதான் நான் அவற்றை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல, எனக்கு தெரியும். உண்மையிலேயே மனுதாரரின் தம்பி எனக்கு நண்பராக இருந்திருந்தால் மனுதாரரின் குழந்தை எந்த பள்ளியில் மற்றும் எந்த வகுப்பில் படிக்கிறார் என்பது எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், நான் பொய்யாக கூறுவதால்தான் அந்த விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

7) மனுதாரரின் நாத்தனார் மற்றும் அவரது கணவர் எங்கு இருந்தார்கள் என்றால் மனுதாரருக்கு திருமணமானதிலிருந்து அவர்கள் எதிர்மனுதாரர் வீட்டில்தான் இருந்தார்கள். காவல் நிலையத்தில் போலீசார் என்னை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் சம்மந்தமாக ஏதேனும் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் உடன் சென்றிருந்தேன். அவ்வளவுதான், மற்றப்படி என்னை விசாரிக்கவில்லை. நான் உண்மையிலேயே காவல் நிலையம் சென்றிருந்தால் போலீசார் என்னை விசாரித்திருப்பார்கள் என்றாலும், குற்ற வழக்கிலும் என்னை சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றாலும், நான் காவல் நிலையம் செல்லாமலேயே காவல் நிலையம் சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான், மனுதாரரின் தம்பி மற்றும் மனுதாரர் ஆகியோர் ஒரே பள்ளியில் படிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு ஆதரவாக அவர் அழைத்ததின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், ஆரம்பத்தில் இருந்தே எனக்கு எ ந்த விவரமும் தெரியாது என்றாலும், உண்மையிலேயே எனக்கு அவ்வாறு தெரிந்திருந்தால் பிரமாண வாக்குமூலத்தில் தேதி, நான் ஆகியவற்றை குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல. நான் எந்த சம்பவத்தை குறித்தும் செவி வழியாக கூட கேட்டதில்லை என்றால் சரியல்ல. நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல, மனுதாரரின் தம்பி அழைத்தபோதெல்லாம் நான் நேரில் சென்று பார்த்துள்ளேன். நான் நேரில் செல்லவில்லை என்றாலும், அவ்வாறு சென்றிருந்தால் எதிர்மனுதாரர்கள் எந்த எந்த நாட்டில் வேலை செய்தார்கள் போன்ற விவரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை.